සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**63 T I,II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2018 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2018 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2018**

ව්‍යවසායකත්ව අධ්‍යයනය I, II
முயற்சியாண்மைக் கற்கை I, II
Entrepreneurship Studies I, II

**12. 12. 2018 / 0830 - 1140**

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## முயற்சியாண்மைக் கற்கை I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** விமல், அமல் மற்றும் சுனிமல் பின்வருமாறு வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

விமல் : வணிகச் சூழலினை ஆய்வு செய்து, வணிக வாய்ப்பினை கண்டறிந்து, அதனைப் புதிய வணிகமாக அமைத்து, வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுதல்

அமல் : வணிகச் சூழலினை ஆய்வு செய்து, வணிக வாய்ப்பினை கண்டறிந்து புதிய உற்பத்தியில் ஈடுபடுதல்

சுனிமல் : வணிக சூழலினை ஆய்வு செய்து, வணிக வாய்ப்பினை கண்டறிந்து, வெளிநாடுகளிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்தல்

இவர்களில் முயற்சியாளராக கருதப்படக் கூடியவர் / கருதப்படக் கூடியவர்கள்

(1) விமல் (2) அமல் மற்றும் சுனிமல்
(3) சுனிமல் (4) விமல் மற்றும் சுனிமல்

**2.** வணிகங்கள் தொடர்பாக இரண்டு கூற்றுகள் தரப்பட்டுள்ளன.

A - தாராளமாக பணத்தினை ஈடுபடுத்தி தொடங்கும் எந்தவொரு வணிகமும் வெற்றிகரமாக அமையும்.
B - வணிக திட்டமிடலின்போது புறச்சூழல் தொடர்பான எதிர்வுக்கூறலானது நிச்சயமற்றதாகும்.

மேற்படி கூற்றுகளில் வணிக நடவடிக்கைகள் தொடர்பில்

(1) A யும் B யும் சரியான கூற்றுகளாகும். (2) A யும் B யும் தவறான கூற்றுகளாகும்.
(3) A சரியானது, B தவறானது. (4) A தவறானது, B சரியானது.

**3.** உயர்ந்தளவான சம்பளத்தை பெற்றுதரும் தொழிலில் ஈடுபடுவதற்கு ஒருவருக்குள்ள விருப்பமானது முயற்சியாண்மைக்கெதிரான

(1) சமூகக் காரணியாகும். (2) பொருளாதாரக் காரணியாகும்.
(3) கலாச்சாரக் காரணியாகும். (4) அரசியல் காரணியாகும்.

**4.** முயற்சியாளர் தமது வணிகத்தின் எதிர்கால நடவடிக்கைகளை முறையாக திட்டமிட வேண்டும். இத்திறனானது,

(1) பகுப்பாய்வு திறனாக இனங்காணலாம்.
(2) மானிட திறனான இனங்காணலாம்.
(3) தொழினுட்பத் திறனாக இனங்காணலாம்.
(4) எண்ணக்கருவாக்கத் திறனாக இனங்காணலாம்.

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

5. முயற்சியாளர் தமது எசமானாக தாமே இருப்பதை விரும்புவார். இதனூடாக விவரிக்கப்படும் பண்பானது
(1) நேர்ச்சிந்தனை ஆகும்.
(2) திடமான நோக்கத்தைக் கொண்டிருத்தல் ஆகும்.
(3) நெகிழும் தன்மை ஆகும்.
(4) சுதந்திரத்தன்மை ஆகும்.

6. முயற்சியாளர் தொடர்பான மிகச் சரியான கூற்று எது?
(1) கணிப்பீட்டுக்கு உட்படுத்தாது அதிகூடிய நட்ட இடரினை ஏற்றுக்கொண்டு உயர் இலாபத்தினை பெற விரும்பாத நபராகும்.
(2) உரியவாறு பரிசீலனை செய்து எந்தவொரு நட்ட இடரையும் ஏற்பதற்கு விரும்பும் நபராகும்.
(3) எப்பொழுதும் தமது வெற்றிக்கு தமது விதியும் அதிர்ஷ்டமுமே காரணமாகும் என நம்புபவர்.
(4) எப்பொழுதும் கடும் கொள்கைகளை பின்பற்றி சூழலில் நிகழும் மாற்றங்களுக்கு அமைவற்ற வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நபராவார்.

7. எந்தவொரு வணிக நிறுவனத்திலும் காணக்கூடிய பொது பண்பானது,
(1) உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடல்
(2) இலாபமீட்டல்
(3) விளம்பரம் செய்தல்
(4) வரையறுக்கப்பட்ட வளங்களை பயன்படுத்துதல்

8. முயற்சியாளர் ஒருவர் தமது வணிக நிறுவனத்தின் பலங்களை அறிந்துக் கொள்வதற்காக பகுப்பாய்வது,
(1) அகச் சூழலையாகும். (2) அண்மியச் சூழலையாகும்.
(3) புறச் சூழலையாகும். (4) பூகோளச் சூழலையாகும்.

9. முயற்சியாளர்கள் கடும் கொள்கைகள் மற்றும் நம்பிக்கைகளை உறுதியாக **கடைபிடிக்காமையானது**
(1) நெகிழும் தன்மையென இனங்காணலாம். (2) தன்னம்பிக்கையென இனங்காணலாம்.
(3) சுய ஊக்குவிப்பென இனங்காணலாம். (4) அர்ப்பணிப்பென இனங்காணலம்.

10. 'அரசு வரிவிகிதங்களை அதிகரிக்கின்றமை வணிகத்திற்குச் சவாலாகும்.' இதனூடாக இனங்காணப்படும் சூழலானது,
(1) அண்மியச் சூழலாகும். (2) அரசியல் மற்றும் சட்டச் சூழலாகும்.
(3) சமூகக் கலாசாரச் சூழலாகும். (4) பொருளாதாரச் சூழலாகும்.

11. எது இலாப நோக்கமற்ற வணிகமாகும்?
(1) பேரங்காடி (2) ஆடையுற்பத்தி நிலையம்
(3) அரச வைத்தியசாலை (4) கிராமிய வங்கி

12. வணிகத்தின் ஓர் அண்மியச் சூழலின் பலமானது
(1) உரிமையாளர்கள் (2) போட்டியாளர்கள்
(3) முகாமையாளர்கள் (4) வெளிநாட்டு முதலீட்டாளர்கள்

13. பொது நோக்கமொன்றை அடைவதற்காக ஒன்றுகூடியுள்ள நபர் குழாமானது,
(1) நிறுவனமாகும். (2) திணைக்களமாகும்.
(3) கூட்டுத்தாபனமாகும். (4) வலைப்பின்னலாகும்.

14. பியல் தமது ஊழியர்களுக்கான சேமலாப நிதியினை முறையாக செலுத்தி வருகின்றார். அவரால் பூர்த்தி செய்யப்படுவது
(1) பொருளாதார பொறுப்புடமை (2) சட்டரீதியான பொறுப்புடமை
(3) நெறிமுறையான பொறுப்புடமை (4) தன்னலமற்ற பொறுப்புடமை

15. கமல் வங்கி கடனொன்றை பெற்று, குடும்பத்தின் பங்களிப்புடன் திட்டமிடலுக்கு கணிசமானளவு காலத்தை செலவிடாது விரைவாக வணிக நடவடிக்கைகளை ஆரம்பித்தார். எனினும், அவருக்கு வணிகத்தை வெற்றிகரமாக நடாத்த இயலவில்லை. கமலின் வணிகமானது தோல்வியுற்றதற்கான காரணமொன்றாக கருதக்கூடியது,
(1) கடன் பணத்தின் மூலம் வணிகத்தினை ஆரம்பித்தமை.
(2) குடும்ப அங்கத்தவர்களை வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியமை.
(3) வணிகத்தை முறையாகத் திட்டமிடாமை.
(4) குறைந்தளவான மூலதனத்துடன் ஆரம்பித்தமை.

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

1665

**16.** அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் உள்நாட்டுக் கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கான செயற்றிட்டத்தை ஒரு
(1) பலமாக இனங்காணலாம். (2) பலவீனமாக இனங்காணலாம்.
(3) வாய்ப்பாக இனங்காணலாம். (4) சவாலாக இனங்காணலாம்.

**17.** தேவைகள் மற்றும் விருப்பங்கள் தொடர்பான பண்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - உருவாக்க முடியும்
B - சகலருக்கும் பொதுவானது
C - குறித்த நபருக்கேற்ப மாற்றமடையக்கூடியது
D - வரையறுக்கப்பட்டது

சரியான கூற்றை தெரிவுசெய்க.
(1) A யும் C யும் விருப்பங்களாவதோடு B யும் D யும் தேவைகளாகும்.
(2) A யும் B யும் விருப்பங்களாவதோடு C யும் D யும் தேவைகளாகும்.
(3) A, B மற்றும் D விருப்பங்களாவதோடு C தேவையாகும்.
(4) B யும் C யும் விருப்பங்களாவதோடு A யும் D யும் தேவைகளாகும்.

**18.** இலத்திரனியல் வணிகமானது
(1) விரிவுப்படுத்தலாகும். (2) புதிய கண்டுபிடிப்பாகும்.
(3) பின்பற்றுதலாகும். (4) கலவையாகும்.

**19.** வங்கிச் சேவைகளை வழங்கும் வணிக நிறுவனமானது
(1) ஆரம்பத் துறையை சார்ந்ததாகும். (2) இரண்டாம் நிலைப் பிரிவைச் சார்ந்ததாகும்.
(3) மூன்றாம் நிலைப் பிரிவைச் சார்ந்ததாகும். (4) கைத்தொழிற் துறையை சார்ந்ததாகும்.

**20.** கையடக்கத்தொலைபேசி மூலமான பணப்பரிமாற்றச் சேவையானது,
(1) பாவனையிலுள்ள சேவையை நடைமுறையிலுள்ள சந்தையில் முன்வைத்தலாகும்.
(2) பாவனையிலுள்ள சேவையை புதிய சந்தையில் முன்வைத்தலாகும்.
(3) புதிய சேவையை நடைமுறையிலுள்ள சந்தையில் முன்வைத்தலாகும்.
(4) புதிய சேவையை புதிய சந்தையில் முன்வைத்தலாகும்.

**21.** தனியுரிமை வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு உரிய பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் சான்றிதழானது,
(1) பங்குடமை ஒப்பந்தம் ஆகும்.
(2) பிரதேச செயலாளர் சான்றிதழ் ஆகும்.
(3) வியாபார பெயர் பதிவுச் சான்றிதழ் ஆகும்.
(4) தனிநபர் வியாபாரப் பதிவிற்கான சான்றிதழ் ஆகும்.

**22.** நுகர்வோரை கவர்வதற்கான மிகப் பொருத்தமான தந்திரோபாயமானது,
(1) உற்பத்தி வகைகளை அறிமுகப்படுத்தல்
(2) தரங்குறைக்கப்பட்டு விலையை குறைத்தல்
(3) வங்கிக் கடனைப் பெற்று வணிக நடவடிக்கைகளை விரிவாக்கல்
(4) புதிய ஊழியர்களை இணைத்தல்

**23.** நட்ட இடரை ஏற்கும் நபரொருவருக்கு போதுமானளவு பயனை ஈட்டுத்தரும் கவர்ச்சிகரமான முதலீட்டு வாய்ப்பினை
(1) வணிக எண்ணக்கருவாக கருதலாம்.
(2) சிறந்த வணிக நடவடிக்கையாகக் கருதலாம்.
(3) வணிக வாய்ப்பாகக் கருதலாம்.
(4) முயற்சியாளரது திறமையாகக் கருதலாம்.

**24.** யாராயினுமொருவரது புதிய கண்டுபிடிப்பிற்கு அரசினால் வழங்கப்படும் சான்றிதழானது
(1) நியம சான்றிதழாகும். (2) ஆக்கவுரிமையாகும்.
(3) புத்தாக்கச் சான்றிதழாகும். (4) தரச்சான்றிதழாகும்.

**25.** வணிகத்திற்கு அவசியமான ஊழியர்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடங்குவது
(1) நிதித் திட்டத்திலாகும்.
(2) சந்தைப்படுத்தல் திட்டத்திலாகும்.
(3) நிர்வாக நடவடிக்கைகளுக்கானத் திட்டத்திலாகும்.
(4) உற்பத்திக் கிரயத் திட்டத்திலாகும்.

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**26.** பொதுத்துறை வணிக அமைப்பொன்றாக கருதப்படக்கூடியது
(1) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி (2) அரசக் கம்பனி
(3) தனியார் கம்பனி (4) பங்குடமை

**27.** வணிகத் திட்டமிடலானது,
(1) வணிக நடவடிக்கைகளை இனங்கண்டு அவற்றை நடைமுறைப்படுத்தும் விதத்தினை முறையாக விவரிக்கும் ஆவணமாகும்.
(2) வணிகத்தின் மூலம் அடைய எத்தனிக்கும் குறிக்கோள்களை முன்வைக்கும் ஆவணமாகும்.
(3) வணிகத்தின் மூலம் அடைய எத்தனிக்கும் குறிக்கோள்கள் மற்றும் அவற்றை அடைவதற்கு நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் பல்வகை செயற்பாடுகளை விவரிக்கும் ஆவணமாகும்.
(4) சூழலில் ஏற்படும் வெவ்வேறு மாற்றங்களுக்கு ஏற்ப பொருந்தி செயற்படும் விதத்தை காட்டும் ஆவணமாகும்.

**28.** ஏற்றுமதி மற்றும் இறக்குமதிப் பண்டங்களின் தரப்பரிசோதனை போன்ற நிதிசாரா ஊக்குவிப்புகளை வழங்குவது
(1) கைத்தொழில் தொழிநுட்ப நிறுவனம்
(2) இலங்கை கட்டளைகள் நிறுவனம்
(3) கைத்தொழில் அபிவிருத்திச் சபை
(4) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

**29.** பின்வருவனவற்றுள் உற்பத்தி வேறுபாடாக கருதப்படக்கூடியது
(1) புதிய பால்மா வகையொன்றை அறிமுகப்படுத்தல்
(2) சலுகை விலையில் பால்மாவை பெற்றுக்கொடுத்தல்
(3) விசேட கழிவினைப் பெற்றுக்கொடுத்தல்
(4) சிறியளவிலான சிக்கனப் பால்மா பைக்கற்றுக்களை அறிமுகப்படுத்தல்

**30.** அலகுக்கான உற்பத்திக் கிரயத்தை கணிக்கும் சரியான விதத்தைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) $\dfrac{\text{மொத்த உற்பத்தி}}{\text{உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை}}$

(2) $\dfrac{\text{மொத்த உற்பத்தி}}{\text{மூலப்பொருட் கிரயம்}}$

(3) $\dfrac{\text{மொத்த உற்பத்திக் கிரயம்}}{\text{உற்பத்திக் கிரயம்}}$

(4) $\dfrac{\text{மொத்த உற்பத்திக் கிரயம்}}{\text{உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை}}$

**31.** முயற்சியாளருக்கும் வணிகருக்குமிடையிலான ஒற்றுமை **அல்லாதது**
(1) நட்ட இடரிற்கு முகங்கொடுத்தல்
(2) போட்டிக்கு முகங்கொடுத்தல்
(3) சுய ஊக்கம்
(4) வளங்களில் உச்சளவில் பயனைப் பெறுதல்

**32.** எது தனியார் துறை வணிக அமைப்பினைச் சார்ந்தது?
(1) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி (2) அதிகாரச் சபை
(3) கூட்டுதாபனம் (4) திணைக்களம்

**33.** ரோஹினி தனது வணிகத்திற்கு ரூ. 200 000 இனை மூலதனமாக ஈடுபடுத்தியதுடன் சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு ரூ. 75 000 இனை செலவிட்டார். இத்தகவலிற்கு ஏற்ப மிகவும் சரியான விடை யாது?
(1) வணிகத்தின் மொத்த முதலீடு ரூ. 275 000 ஆவதோடு ரூ. 75000 சொத்துக்கொள்வனவிற்கான காசு வெளிப்பாய்ச்சலாகும்.
(2) வணிகத்தின் நிலையான சொத்துக்கள் ரூ. 75 000 உம் கடன்கொடுநர் ரூ. 125 000 உம் ஆகும்.
(3) ரூ. 200 000 காசு உட்பாய்ச்சலாவதோடு ரூ. 75 000 சொத்துக் கொள்வனவிற்கான காசு வெளிப்பாய்ச்சலாகும்.
(4) காசு மீதி ரூ. 125 000 உம் மொத்தக் காசு வெளிப்பாய்ச்சல் ரூ. 275000 உம் ஆகும்.

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

**34.** கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் அடிப்படை **பண்பல்லாதது**
(1) உரிமையாளர்களினால் மூலதனத்தை ஈடுபடுத்துதல்
(2) சட்ட ஆளுமை காணப்படல்
(3) முகாமைத்துவ நடவடிக்கைகள் இயக்குனர்களினால் மேற்கொள்ளப்படுதல்
(4) நீடித்துழைக்கும் தன்மை காணப்படாமை

**35.** உற்பத்தி செயன்முறையில் **உள்ளடங்காதது**
(1) வெளியீடு (2) உள்ளீடு (3) வழங்கல் (4) மாற்றல் செயற்பாடு

● பின்வரும் சம்பவத்தை வாசித்து **36** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

கவிந்து என்பவர் ஆடையுற்பத்தி நிறுவனமொன்றை நடாத்தி வருகின்றார். அவரது மொத்த ஊழியர்களில் 50% ஆனோர் அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களாவர். கவிந்து நவீனப்பாணியிலான ஆடை வகைகளை உற்பத்திசெய்கின்றார். அதற்காக அவர் வங்கி கடனொன்றை பெற்று கொண்டுள்ளதோடு உயர் வட்டியையும் செலுத்துகின்றார். எவ்வாறாயினும், அவர் தமது வணிகத்திற்குரிய வரிப்பணத்தையும் முறையாக செலுத்தி வருவதோடு தனது வணிகத்திற்காக 2 மில்லியன் ரூபா பெறுமதியான காப்புறுதியினையும் பெற்றுள்ளார். அத்துடன் அவர் தமது வணிக நடவடிக்கைகள் திட்டத்திற்கமைவாக நடைபெறுகின்றனவா என அடிக்கடி ஆராய்வார்.

**36.** கவிந்து என்பவர்
(1) ஒரு நிறுவனத்தின் உள்ளக முயற்சியாளர் (2) ஒரு சமூக முயற்சியாளர்
(3) ஒரு பசுமை முயற்சியாளர் (4) ஆக்கத்திறன் மிக்க முயற்சியாளர்

**37.** கடன் வட்டி வீத அதிகரிப்பானது, கவிந்துவின் வணிகத்திற்கான
(1) பலமொன்றாக இனங்காணலாம். (2) வாய்ப்பொன்றாக இனங்காணலாம்.
(3) சவாலாக இனங்காணலாம். (4) போட்டி அனுகூலமாக இனங்காணலாம்.

**38.** வணிக நடவடிக்கைகள் திட்டத்திற்கமைவாக இடம்பெறுகின்றனவா என பரிசீலனை செய்தலானது
(1) உரிமையாளரின் வகிபாகமாகும். (2) முகாமையாளரின் வகிபாகமாகும்.
(3) தலைமைத்துவ வகிபாகமாகும். (4) உற்பத்தியாளரின் வகிபாகமாகும்.

**39.** காப்புறுதி தவணைப் பணமானது
(1) ஏனைய உற்பத்திக் கிரயமாகும்.
(2) மூலப்பொருள் கிரயமாகும்.
(3) அலகிற்கான உற்பத்திக் கிரயமாகும்.
(4) பொது மேந்தலைக் கிரயமாகும்.

**40.** 'நவீன பாணியிலான ஆடைவகைகளை உற்பத்தி செய்தல்' என்பதினூடாக இனங்காணக்கூடிய முயற்சியாண்மை பண்பானது
(1) அர்ப்பணிப்பு (2) நெகிழும் தன்மை
(3) ஆக்கத்திறன் (4) நட்ட இடர்களைப் பொறுப்பேற்றல்

* *

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

63 | T | I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2018 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2018 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2018

ව්‍යවසායකත්ව අධ්‍යයනය I, II
**முயற்சியாண்மைக் கற்கை I, II**
Entrepreneurship Studies I, II

## முயற்சியாண்மைக் கற்கை II

* **முதலாம்** வினா உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**1.** பின்வரும் சம்பவத்தை கவனமாக வாசித்து (i) தொடக்கம் (x) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

இரத்தினபுரி பிரதேசத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற மாணிக்க ஆபரணங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் 'ஜெம் ஜுவலரி' நிறுவனத்திற்கு வருகை தந்த சுதேசும் அவரது வெளிநாட்டு நண்பரான எலனும், ஜெம் ஜுவலரி நிறுவனத்தின் உரிமையாளரான கலனவினால் மிகவும் மகிழ்ச்சிகரமாக வரவேற்கப்பட்டனர். சிறிது நேர உரையாடலின் பின்னர் அவர்கள் சிறந்த நண்பர்களானர். அவர்கள் வியாபாரக் கருமங்கள் தொடர்பில் ஆழ்ந்த கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இதன்போது கலன தனது வாழ்வின் கடந்த கால சம்பவங்களை சுதேஷ் மற்றும் எலனுடன் பெருமையோடு பகிர்ந்துக் கொண்டார். கலனவின் வெளிப்படுத்தலுக்கேற்ப அவரது பிறந்த ஊர் இரத்தினபுரியாகும். தனது பாடசாலை காலத்தில் வணிகமொன்றை வெற்றிகரமாக நடாத்தும் விதத்தினைப் பற்றி கற்றறிந்த அவர், எதிர்காலத்தில் தாமாகவே வணிகமொன்றை ஆரம்பித்து நடாத்துவது தொடர்பாக கனாக் கண்டவராவார்.

கலன உயர்தரப் பரீட்சையில் சிறந்த சித்திகளைப் பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவானார். அங்கு இரசாயனவியல் துறையில் விசேட பட்டமொன்றைப் பெற்றுக்கொண்டார். பல்கலைக்கழகத்தில் கற்கும் காலங்களில் முகங்கொடுத்த பொருளாதார ரீதியிலான கஷ்டங்களைக் குறைத்து கொள்வதற்காகவும், தமது வியாபாரக் கனவை நனவாக்குவதற்காகவும் குறைந்த பெறுமதியிலான மாணிக்க கற்களை அகழ்வோரிடம் இருந்து கொள்வனவு செய்து விற்பனை செய்துள்ளார். அவர் குறுகிய காலத்திலேயே சிற்றளவிலான மாணிக்கக்கல் வியாபாரியாக பிரசித்தி பெற்றார். வியாபாரத்தில் ஈட்டப்பட்ட இலாபத்தினை சேமித்த கலன தனது பட்டப்படிப்பினை நிறைவு செய்ததன் பின்னர் தனது வியாபாரத்தை மேலும் விஸ்தரித்து மாணிக்கக்கல் பதித்து பெறுமதி சேர்க்கப்பட்ட நவீன தங்க ஆபரணங்களை உற்பத்தி செய்யலானார். இவ்வியாபாரத்தை 'ஜெம் ஜுவலரி' என நடாத்தி வருகின்றார்.

இந்நிறுவனத்தின் ஊழியர்களில் 50% ஆனோர் அப்பிரதேசத்தில் வாழும் குறைந்த வருமானம் ஈட்டிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். ஒவ்வொரு வருடமும் பிரதேசத்தில் உள்ள ஏழ்மையான குடும்பத்திற்கு புதிய வீடொன்றை நிர்மாணித்து வழங்குவது கலனவின் மற்றுமொரு செயலாகும். அதனைத்தவிர முறையாக வியாபார நடவடிக்கைகளை நடாத்தும் இவர், அரசிற்கு செலுத்தவேண்டிய வரிப்பணத்தையும் உரியவாறு செலுத்தி வருகின்றார்.

(i) கலன வெற்றிகரமான முயற்சியாளர் என்பதை சான்றுப்படுத்தும் **இரண்டு** விடயங்களைத் தருக.

(ii) கலனவின் 'ஜெம் ஜுவலரி' நிறுவனத்தின் வியாபார பதிவு தொடர்பிலான சட்டத்தன்மையை விளக்குக.

(iii) கலனவினால் நிறைவேற்றப்படும் **இரண்டு** சமூகப்பொறுப்புகளைக் குறிப்பிடுக.

(iv) சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றுவதினூடாக கலனவின் வணிகத்திற்கு கிடைக்கும் **இரண்டு** பயன்களைக் குறிப்பிடுக.

(v) கலனவின் முயற்சியாண்மை நடவடிக்கைகளினால் அவருக்கும் தேசிய பொருளாதாரத்திற்கும் கிடைக்கும் அனுகூலங்கள் **இரண்டு** வீதம் தனித்தனியே குறிப்பிடுக.

[பக். 7 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

மேற்குறித்த சம்பவத்தில் விவரிக்கப்பட்ட கலனவின் வணிகத்தின் எதிர்வரும் மாதத்திற்குரிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| உருப்படிகள் | பெறுமதி (ரூபா) |
| --- | --- |
| விற்பனை வருமானம் | 5 000 000 |
| மூலப்பொருட் கொள்வனவு | 2 000 000 |
| ஊழியர்களுக்கான சம்பளம் | 400 000 |
| ஏனைய உற்பத்திச் செலவுகள் | 180 000 |
| நிர்வாகச் செலவுகள் | 98 000 |
| வங்கிக் கடன் | 1 000 000 |
| விற்பனைச் செலவு | 50 000 |

மேலேயுள்ள தகவல்களைப் பயன்படுத்தி கலனவின் வணிகத்தின்,

(vi) எதிர்வரும் மாதத்திற்கான உத்தேச பெறுபேற்றினை கணிக்கும் அட்டவணையை தயாரிக்குக.
(vii) எதிர்வரும் மாதத்திற்கான மொத்த உற்பத்திக் கிரயத்தை கணிக்குக.
(viii) எதிர்வரும் மாதத்திற்கான மொத்த உற்பத்தியல்லாக் கிரயத்தை கணிக்குக.
(ix) எதிர்வரும் மாதத்திற்கான தேறிய இலாபத்தை கணிக்குக.
(x) காசு உட்பாய்ச்சல் மற்றும் காசு வெளிப்பாய்ச்சலுக்கான உதாரணமொன்று வீதம் குறிப்பிடுக.

(02 × 10 = 20 புள்ளிகள்)

**2.** (i) 'முயற்சியாளர்கள் நாட்டின் வளமாகும்.' இதனைச் சுருக்கமாக விளக்குக.
(ii) உற்பத்தி காரணிகளான நிலம் மற்றும் மூலதனத்திற்கு இடையிலான பிரதான வேறுபாட்டினைக் குறிப்பிடுக.
(iii) இலங்கையில் முயற்சியாண்மையினை விருத்தி செய்தல் அவசியமாகும் என்பதற்கு சான்றாக **நான்கு** காரணங்களைக் குறிப்பிடுக.
(iv) வெற்றிகரமான முயற்சியாளர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய தொடர்பாடற் திறன்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.
(v) 'சிற்றளவு வணிகங்கள் நாட்டின் அபிவிருத்திக்கு நேரடிப் பங்களிப்பை வழங்குகின்றன.' இக்கூற்றினை நிரூபிக்கும் **நான்கு** விடயங்களைத் தருக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

**3.** (i) முதன் நிலை மற்றும் இரண்டாம் நிலை வணிகங்களிற்கு உதாரணங்கள் **இரண்டு** வீதம் குறிப்பிடுக.
(ii) வணிக விழுமியங்களை நிர்ணயிப்பதில் செல்வாக்கு செலுத்தும் பிரதான **இரண்டு** பிரிவினரை பெயரிடுக.
(iii) பெண் முயற்சியாளர்கள் பெருமளவில் ஈடுபடும் **நான்குத்** துறைகளைக் குறிப்பிடுக.
(iv) இலங்கையில் முயற்சியாண்மைக் கலாச்சாரத்தை விருத்திசெய்வதற்கான நிதிசாரா ஊக்குவிப்புகளிற்கு **இரண்டு** உதாரணங்கள் தருக.
(v) நிறைவேற்றுச் சுருக்கத்தைத் தயாரிக்கையில் கருத்திற்கொள்ள வேண்டிய **இரண்டு** விடயங்களைக் குறிப்பிடுக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

**4.** (i) முயற்சியாளருக்கு அரச ஊக்குவிப்புகள் அவசியமாவதற்கான **இரண்டு** காரணங்களைக் குறிப்பிடுக.
(ii) தனியாளுடமை வணிகத்தின் **இரண்டு** வரையறைகளைக் குறிப்பிடுக.
(iii) முயற்சியாளர்கள் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளை ஆரம்பிப்பதற்கு பெருமளவிலான ஆர்வத்தினை கொண்டிருப்பதற்கான **இரண்டு** காரணங்களைக் குறிப்பிடுக.
(iv) அங்கீகார வணிக அமைப்பை நடைமுறைப்படுத்தக்கூடிய **இரண்டு** நிறுவன வகைகளைத் தருக.
(v) பங்குடமை ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய **நான்கு** காரணிகளைக் குறிப்பிடுக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

5. (i) சந்தை ஆய்வின்போது தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடிய **இரண்டு** வழிமுறைகளைத் தருக.

(ii) சந்தை திட்டமிடலின் மூலம் முயற்சியாளருக்கு கிடைக்கும் **நான்கு** பயன்களைத் தருக.

(iii) புராதன வணிகச்சூழலுடன் ஒப்பிட்டு நவீன வணிகச்சூழலின் **இரண்டு** பண்புகளைக் குறிப்பிடுக.

(iv) தற்காலத்தில் நவீன தொழிநுட்பத்தினை உபயோகித்து பொருட்கள் மற்றும் சேவைகளினை மேம்படுத்தக்கூடிய **இரண்டு** முறைகளைத் தருக.

(v) சுனில் பெரேரா என்பவர் ஒரு ஆடையுற்பத்திச்சாலையின் உரிமையாளராவார். அவரது நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படும் டீ - சர்டிற்கான உற்பத்திக் கிரயத்தைக் கணிப்பிடுவதற்கு உள்ளடக்கப்பட வேண்டிய **நான்கு** கிரய உருப்படிகளைக் குறிப்பிடுக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

6. (i) நல்ல வணிக எண்ணக்கருவொன்றை தெரிவுசெய்வதற்கான செயன்முறையின் **இரண்டு** படிமுறைகளைக் குறிப்பிடுக.

(ii) வணிக எண்ணக்கருவிற்கும் வணிக வாய்ப்பிற்குமிடையிலான பிரதான வேறுபாடுகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(iii) உங்கள் விருப்பத்திற்கேற்ப வணிகமொன்றைக் கருத்திற்கொண்டு அதன் பலம், பலவீனம், வாய்ப்பு மற்றும் சவால் என்பவற்றைக் குறிப்பிடும் வகையில் ஒவ்வொரு உதாரணம் வீதம் தருக.

(iv) வணிகமொன்றை ஆரம்பிக்கும்போது கருத்தில் கொள்ளவேண்டிய **நான்கு** காரணிகளை பெயரிடுக.

(v) புதிய முயற்சியாளர் ஒருவர் சந்தைக்கு பிரவேசிக்க பின்பற்றக்கூடிய மாற்று வழிமுறைகள் **நான்கினை** குறிப்பிடுக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

7. பியல் ரணசிங்க என்பவரது வர்ணப்பூச்சு வியாபார நிறுவனத்தின் வணிக திட்டம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **செலவுக் கணிப்பீடுகள்** | **ரூபாய்** |
|---|---|
| தொழிற்சாலைக்கான காணியை தயார் செய்தல் | 20 000 |
| நீர் வசதியைப் பெறல் | 25 000 |
| வர்ணப்பூச்சு மாதிரி பரிசோதனை | 10 000 |
| சந்தை ஆய்விற்கானச் செலவு | 8 500 |
| தொடக்க தின விழாச் செலவு | 12 000 |
| பிரதேச சபைக்கு செலுத்தப்படும் அனுமதிப்பத்திரக் கட்டணம் | 500 |
| வர்ணக்கலவை இயந்திரக் கொள்வனவு | 100 000 |
| இரண்டு கணினிகளை கொள்வனவு செய்தல் | 70 000 |

வர்ணப்பூச்சு உற்பத்திக்கு பயன்படுத்த உத்தேசிக்கப்பட்ட கட்டிடமானது பியலுக்கு உரித்தானதோடு, அதன் பெறுமதி ரூ. 4 000 000 ஆகும். மேலும், எதிர் வரும் இரண்டு கிழமைகளுக்கான செலவுகளிற்கு ரூ. 50 000 **தேவையென** மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவன**

(i) பியலினது வணிகத்தின் மொத்த நிலையான சொத்துக்களின் பெறுமதியைக் கணிக்குக.
(03 புள்ளிகள்)

(ii) இந்த வியாபாரத்தை ஆரம்பிக்க முன்னராக தேவைப்படும் மொத்தச் செலவினைக் கணிக்குக.
(03 புள்ளிகள்)

(iii) மொத்த முதலீட்டுப் பெறுமதியைக் கணிக்குக.
(04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

***

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka